செய்தி வெளியீடு எண்.676

## செய்தி வெளியீடு – 11.08.2010

## 1711 கோடியே 62 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, கோவை, நாகை, விருதுநகர், சிவகங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

**மதுரை, கோவை, நாகை, விருதுநகர், சிவகங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்காக 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு :**

**105 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம், செம்பனார் கோயில், மயிலாடுதுறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;**

**173 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 பேரூராட்சிகள் மற்றும் இராசபாளையம், திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சிவகாசி ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 395 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;**

**190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி, விருதுநகர் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 637 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;**

**234 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர், வெம்பக் கோட்டை, சிவகாசி, விருதுநகர், வத்திராயிருப்பு, திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 755 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;**

**784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1430 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;**

**224 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 965 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்;**

**என 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும், ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும், மொத்தம் 1711 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்**

**நிறைவேற்றுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

**வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**